RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 140 | மே.28 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# எஸ்ஐஆர் பணிகளை மேற்கொள்ள தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உண்டு: உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

புதுடெல்லி: மே.28-

"சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கையை மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உள்ளது என்றும் அதேநேரத்தில், வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்க்க தேர்தல் ஆணையம் மறுப்பது என்பது சம்பந்தப்பட்ட நபரின் குடியுரிமையைப் பறிப்பதாக அர்த்தமாகாது" என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பிஹாரில் சிறப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. 1950ம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் விதிகளின்படி, இவ்வளவு பரந்த அறவில் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்கு இந்திய தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் இல்லை என்று வாதிடப்பட்டது.

இந்த மனுக்களை தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு விசாரித்தது. விசாரணை நிறைவடைந்ததை அடுத்து தீர்ப்பு ஒத்திவைக்கப்படுவதாக கடந்த ஜனவரி 29ம் தேதி தேதி அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் இன்று தனது தீர்ப்பை வழங்கியுள்ளது.



அதில், "சிறப்பு தீவிர திருத்த (SIR) நடவடிக்கையை மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உள்ளது. எந்தவொரு சட்டரீதியான அல்லது அரசியலமைப்பு ரீதியிலான விதியையும் தேர்தல் ஆணையம் மீறவில்லை. எஸ்ஐஆர் நடவடிக்கையின்போது குடியுரிமையை ஆய்வு செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு உண்டு. அதேநேரத்தில், வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்க்க தேர்தல் ஆணையம் மறுப்பது என்பது சம்பந்தப்பட்ட நபரின் குடியுரிமையைப் பறிப்பதாக அர்த்தமாகாது.

வாக்காளர் பட்டியலில் இருந்து ஒருவரது பெயர் நீக்கப்பட்டால், அது மேலதிக சட்ட ரீதியான விசாரணைக்கு உட்பட்டதாக இருக்கும். குடியுரிமையை நிரூபிக்க இயலாத காரணத்தால் பெயர்கள் நீக்கப்பட்ட நபர்களை, உரிய சட்டரீதியான விசாரணைக்காக தகுந்த அதிகார அமைப்பிடம் தேர்தல் ஆணையம் அனுப்பி வைக்க வேண்டும்.

சுதந்திரமான, நியாயமான தேர்தலுக்கும் எஸ்ஐஆர் நடவடிக்கைக்கும் இடையே நேரடி தொடர்பு இருக்கிறது. அரசியலமைப்பு சட்டக் கட்டமைப்பு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் வாக்காளர் பட்டியல்களைத் திருத்தும் அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு உள்ளது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தத்தை இந்திய தேர்தல் ஆணையம் முதலில் பிஹாரில் தொடங்கியது. இதையடுத்து, தமிழ்நாடு, மேற்கு வங்கம் உட்பட பல மாநிலங்களுக்கும் அது விரிவுபடுத்தியது. தேர்தலுக்கு முன்பாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், அது பல்வேறு கேள்விகளை எழுப்பியது. இதன் காரணமாக பல்வேறு அமைப்புகள் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடுத்தனர். இந்நிலையில், சிறப்பு தீவிரத் திருத்தம் செல்லுபடியாகும் என்றும் அதை நடத்துவதற்கு இந்திய தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உள்ளது என்றும் உச்ச நீதிமன்ற அமர்வு தனது உத்தரவில் உறுதிப்படுத்தி இருக்கிறது.

## பினராயி விஜயன் இல்லத்தில் அமலாக்கத் துறை சோதனை: ஸ்டாலின் கண்டனம்

சென்னை: மே.28-

கேரள முன்னாள் முதல்வர் பினராயி விஜயனின் இல்லத்தில் அமலாக்கத் துறை சோதனை நடத்துவதற்கு திமுக தலைவர் ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'கேரள மாநில முன்னாள் முதல்வர் பினராயி விஜயனுக்கு எதிரான அமலாக்கத் துறை ரெய்டுகளை வன்மையாகக் கண்டிக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எதிராக மத்திய விசாரணை அமைப்புகளை ஏவிவிடும் இத்தகைய போக்கு மிகவும் தவறானது.

பினராயி விஜயன் ஏன் இதுவரை பாஜகவால் குறிவைக்கப்படவில்லை எனப் பொறுப்பற்ற முறையில் தொடர்ந்து குற்றம்சாட்டி வந்த சில காங்கிரஸ் தலைவர்களின் கூற்றுகள் பொருளற்றவை என்பதையும் இந்த ரெய்டுகள் அம்பலப்படுத்தியுள்ளன" எனத் தெரிவித்துள்ளார்.

## 20 கோடி முட்டைகளை சேமித்து வைத்து பள்ளிகளுக்கு வழங்குவதா? அண்ணாமலை கண்டனம்

சென்னை: மே.28-

"கடந்த மார்ச் மாதம் விலை குறைந்த போது, ஒப்பந்ததாரர்கள் சுமார் 20 கோடி முட்டைகளை வாங்கி குளிர்சாதன கிடங்குகளில் சேமித்து வைத்திருக்கிறார்கள். இந்த முட்டைகளை ஆண்டு முழுவதும், பள்ளி மாணவர்களுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது" என தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தமிழகப் பள்ளி மாணவர்களின் மதிய உணவுத் திட்டத்தில் வழங்கப்படும் முட்டைகளுக்கு, ஆண்டு முழுவதும் ஒரு முட்டைக்கு ரூ.5.63 என்ற நிலையான விலையை தமிழக அரசு வழங்குகிறது. இந்த நிலையில், கடந்த மார்ச் மாதம் ஒரு முட்டை ரூ.3.70 என்று விலை குறைந்த போது, ஒப்பந்ததாரர்கள் சுமார் 20 கோடி முட்டைகளை வாங்கி குளிர்சாதன கிடங்குகளில் சேமித்து வைத்திருக்கிறார்கள் என செய்திகள் வெளியாகியுள்ளன.

அதாவது, குறைந்த விலைக்கு பெருமளவில் சேமித்து வைத்து, ஆண்டு முழுவதும், பள்ளி மாணவர்களுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. முட்டை என்பது நீண்ட காலம் கெட்டுப் போகாமல் இருக்கும் பொருள் அல்ல. குளிர்சாதனக் கிடங்கில் மாதக்கணக்கில் வைத்திருந்து, பின்னர் தொலைதூர கிராமப்புற பள்ளிகளுக்கு கொண்டு செல்லப்படும் போது அதன் தரம், ஊட்டச்சத்து மற்றும் உணவு பாதுகாப்பு நிச்சயம் பாதிப்புக்குள்ளாகும்.

கடந்த திமுக ஆட்சியில், பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவுக்கு பல முறை அழுகிய முட்டை வழங்கப்பட்டதைக் கடுமையாகக் கண்டித்திருந்தோம். தவெக ஆட்சியிலும், அதே நிலை தொடராமல் இருக்க வேண்டும். இது வெறும் கொள்முதல் சார்ந்த பிரச்சினை அல்ல. லட்சக்கணக்கான பள்ளிக் குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் பெற்றோரின் நம்பிக்கை சார்ந்ததாகும்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

## ஈகைத் திருநாள்: முதல்வர் விஜய், அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து

சென்னை: மே.28-

முதல்வர் விஜய், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் பக்ரீத் பண்டிகை வாழ்த்துகளைப் பகிர்ந்துள்ளனர்.



முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில்: "ஈகைத் திருநாளாம் பக்ரீத் திருநாளை முன்னிட்டு, இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறைவனின் கட்டளைக்கிணங்க தனது ஒரே மகன் இஸ்மாயிலை தியாகம் செய்யத் துணிந்த இப்ராஹிம் நபியின் உன்னதமான இறை பக்தியையும், தியாகத்தையும் நினைவு கூரும் வகையில் பக்ரீத் திருநாள் கொண்டாடப்படுகிறது. இறை நம்பிக்கை, தியாகம், கருணை, பகிர்வு, மனித நேயம் ஆகிய உயரிய விழுமியங்களை மனித குலத்திற்கு உணர்த்தும் புனிதப் பெருநாளாக பக்ரீத் திகழ்கிறது.

ஏழை, எளிய மக்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதையும், சமூகத்தில் அன்பும், சமத்துவமும் நிலைக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தும் பக்ரீத் திருநாளில் சமுதாயத்தில் மனித நேயமும், மத நல்லிணக்கமும் மேலும் தழைத்தோங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அனைவருக்கும் எனது பக்ரீத் திருநாள் வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறியுள்ளார்.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்: "தியாகத் திருநாளான பக்ரீத் திருநாளில், என்றென்றும் என் நேசத்திற்கும் பாசத்திற்கும் உரியோராகத் திகழும் இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது இனிய வாழ்த்துகள்! அவர்களது வாழ்வில் நலமும் வளமும் பெருகட்டும்!

"ஈத்துவக்கும் இன்பம்" என்று வள்ளுவப் பெருந்தகையால் போற்றப்பட்ட ஈகைப் பண்போடு, ஈட்டிய பொருளில் ஒரு பகுதியை ஏழை, எளியோர் இன்னல் தீர வழங்கி மகிழ்வதை வாழ்வறமாகக் கொண்டு, நபிகள் நாயகம் வழங்கிய அறிவுரைகளை வாழ்க்கை நெறியாகக் கடைப்பிடித்து வாழும் இஸ்லாமியப் பெருமக்களது வாழ்வில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலைபெறட்டும்.

இஸ்லாமிய சமூகத்திற்கும் திமுகவுக்கும் இடையேயான உறவு, அரசியல் மற்றும் சமூகக் காரணங்களைத் தாண்டிய ஆழத்தையும், மேன்மையையும், உண்மையான பிணைப்பையும் கொண்டது. திமுக ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், இஸ்லாமிய சமூகத்தின் பாதுகாப்புக்காகவும் உரிமைகளுக்காகவும் தோளோடு தோள் நின்று போராடும் உணர்வைக் கொண்ட உற்ற தோழமை என்பதை விவரிக்கத் தேவையில்லை. அந்த உறவும் நெருக்கமும் என்றென்றும் தொடரும் என்பதை, இந்த நன்னாளில் மேலும் உறுதி செய்ய விரும்புகிறேன்.

இஸ்லாமிய மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சம் கனிந்த பக்ரீத் பெருநாள் நல்வாழ்த்துகளை மீண்டும் உரித்தாக்குகிறேன்" என்று மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்: "இறை நம்பிக்கை உள்ளவர்கள் எந்தத் தியாகத்திற்கும் தயங்க மாட்டார்கள் என்ற தத்துவத்தைப் பறைசாற்றும் திருநாளாம் 'பக்ரீத்' திருநாளைக் கொண்டாடும் இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த `பக்ரீத்' திருநாள் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இறைவனின் கட்டளையை ஏற்று, தனது ஒரே மகன் இஸ்மாயிலை தியாகம் செய்ய முன்வந்த இறைத் தூதர் இப்ராஹிம் அவர்களின் ஈடு இணையற்ற தியாகத்தை நினைவு கூரும் தினமே பக்ரீத் திருநாளாகும். இறைவனின் விருப்பத்திற்கு கீழ்படிந்து வாழ்வதே சிறந்த வாழ்க்கை நெறி என்று உலகிற்கு பறைசாற்றும் பொன்னாள் இந்நாளாகும்.

நாட்டின் வளர்ச்சிக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் தடைக் கற்களாகத் திகழ்கின்ற அதர்மம், அநீதி, சூழ்ச்சி, வன்மம் ஆகியவற்றை வேரோடும், வேரடி மண்ணோடும் ஒழித்து, நற் சிந்தனைகளும், நன்னெறிகளும் வெற்றி பெற எண்ணற்ற தியாகங்களும், அர்ப்பணிப்புகளும் தேவைப்படும். இறைத் தூதரின் தியாகங்களை மனதில் நிலை நிறுத்தி, மனித நேயம் தழைக்க அர்ப்பணிப்பு உணர்வுடன் பாடுபடுவோம் என இந்த பக்ரீத் திருநாளில் நாம் அனைவரும் உறுதியேற்போம்.

இஸ்லாமியப் பெருமக்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடும் இந்த இனிய திருநாளில், உலகில் அன்பும், அமைதியும் தழைத்தோங்கிட, அனைவரும் மனித நேயத்துடனும், சகோதரத்துவத்துடனும், தியாகச் சிந்தனையுடனும் வாழ்ந்திட வேண்டும் என்று மனதார வாழ்த்தி, இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் அனைவருக்கும், எம்ஜிஆர், ஜெயலலிதாவின் நல்வழியில், எனது பக்ரீத் திருநாள் வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக்கொள்கிறேன்" என்று பழனிசாமி கூறியுள்ளார்.

## "அதிமுகவினர் மனுக்களை பரிசீலித்து இன்று முடிவை அறிவிக்கிறேன்" : சபாநாயகர் ஜேசிடி பிரபாகர்

சென்னை: மே.28-

அதிமுக எம்எல்ஏக்கள் அளித்த மனுக்கள் தொடர்பான முறையான அறிவிப்பை இன்று காலை வெளியிடப் போவதாக சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தல் முடிவை அடுத்து அதிமுகவில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஒரு அணி, சி.வி. சண்முகம் எஸ்.பி. வேலுமணி தலைமையில் ஒரு அணி என இரண்டு அணிகளாக உருவாகின. சி.வி. சண்முகம் எஸ்.பி. வேலுமணி தலைமையில் ஒரு அணி, நம்பிக்கை வாக்கெடுப்பில் விஜய் தலைமையிலான அரசுக்கு ஆதரவாக வாக்களித்தது.

இதையடுத்து, சி.வி. சண்முகம் எஸ்.பி. வேலுமணி தலைமையில் ஒரு அணியினர் மீது கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி தரப்பில் சபாநாயகரிடம் மனு அளிக்கப்பட்டது. இதேபோல், சட்டமன்ற கொறடா, சட்டமன்றக் குழு தலைவர் தொடர்பாக சி.வி.சண்முகம் எஸ்.பி. வேலுமணி அணி சபாநாயகரிடம் மனு ஒன்றை அளித்தது.

இந்நிலையில், இரு அணிகளும் இன்று ஒன்றுசேர்ந்துள்ளன. இதையடுத்து, இரு தரப்பும் சபாநாயகரைச் சந்தித்து ஏற்கனவே தாங்கள் அளித்த மனுக்களை வாபஸ் பெறுவதாக அறிவித்தனர்.

இதையடுத்து, சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர், "அதிமுக சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஏற்கனவே இரு வேறு குழுக்களாக பிரிந்து மனுக்களை அளித்திருந்தார்கள். நேற்று முன்தினம் 5 பேர் சேர்ந்து ஒரு மனு கொடுத்தார்கள். பிறகு, ஒருவர் ஒரு மனு கொடுத்தார். இன்றைக்கு, ஏற்கனவே அளிக்கப்பட்டவர்கள் சார்பில் மனு அளிக்கப்பட்டுள்ளது. அவற்றை படித்து ஆய்வு செய்து முறையான அறிவிப்பை இன்று காலை வெளியிடுவேன்" என தெரிவித்தார்.

அதிமுகவில் பிரிந்தவர்கள் தற்போது இணைந்துள்ளார்களே என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு, "இது குறித்து நீங்கள் அவர்களிடம்தான் கேட்க வேண்டும். எனக்கு அவர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். அடுத்து அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை நீங்கள் அவர்களிடம்தான் கேட்க வேண்டும்" என தெரிவித்தார்.



## காவேரிப்பட்டினத்தில் மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டிவெற்றி பெற்ற அணிகளுக்கு சுழற்கோப்பை வழங்கி பாராட்டு

கிருஷ்ணகிரிமே,28-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான மாபெரும் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு தவெக சட்டமன்ற உறுப்பினர் முருந்தன் மற்றும் காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழு உறுப்பினரும் முன்னாள் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவருமான எல். சுப்பிரமணியன் ஆகியோர் ரொக்கப் பரிசு மற்றும் சுழற்கோப்பைகளை வழங்கி பாராட்டினர்.தமிழக முதல்வராக ஜோசப் விஜய் பதவி ஏற்றதை கொண்டாடும் விதமாக காவேரிப்பட்டினம் தவெக ஒன்றிய கழகத்தின் சார்பில் இந்த கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டது. காவேரிப்பட்டினம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் கிருஷ்ணகிரி, காவேரிப் பட்டினம், போத்தாபுரம், தளிஹள்ளி, நரிமேடு, பையூர், ஜெகதாப், ஹாள்வேஹாள்ளி, திம்மாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 24 அணிகள் கலந்து கொண்டு விளையாடின. நாக் அவுட் முறையில் நடைபெற்ற இந்த தொடரின் இறுதிப்போட்டியில் கிரிக்கெட்டீம் அணியும் 11 எப்.சி.சி. அணியும் மோதின. பரபரப்பாக நடைபெற்ற இறுதிப்போட்டியில் கிரிக்கெட் டீம் அணி வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் முதலிடம் பெற்ற கிரிக்கெட் டீம் அணிக்கும், இரண்டாம் இடம் பெற்ற 11 எப்.சி.சி. அணிக்கும், மூன்றாம் இடம் பெற்ற ஆர்.சி.பி. அணிக்கும் ரொக்கப் பரிசுகள் மற்றும் சுழற்கோப்பைகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் காவேரிப்பட்டினம் தவெக ஒன்றிய செயலாளர் விஜய்குமார், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் பார்த்திபன், கிருஷ்ணகிரி நகர சசிகுமார், திம்மாபுரம் ஊராட்சி செயலாளர் விஜய், துணை ஊராட்சி செயலாளர் சக்திவேல், காவேரிப்பட்டினம் பேரூராட்சி செயலாளர் கோகுல், ஒன்றிய துணை செயலாளர் உதயகுமார், ஒன்றிய இணைச் செயலாளர் பச்சையப்பா, நகர இளைஞரணி செயலாளர் அப்துல் ரஷீக், நகர செயற்குழு உறுப்பினர் அருண்குமார், கே.வி.எஸ். சாந்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ராயபுரத்தில் கடத்தப்பட்ட குழந்தையை 5 மணி நேரத்தில் மீட்ட போலீஸார்: காவல் ஆணையர் பாராட்டு



சென்னை:மே,28-

ராயபுரத்தில் கடத்தப்பட்ட குழந்தையை, 5 மணி நேரத்தில் மீட்ட தனிப்படை போலீஸாரை காவல் ஆணையர் நேரில் அழைத்து பாராட்டினார். சென்னை, முகலிவாக்கத்தைச் சேர்ந்தவர் கீதா (29).இவர், கடந்த 13ம் தேதி ராயபுரத்தில் உள்ள ஆர்எஸ்ஆர்எம் அரசு மகப்பேறு மருத்துவமனையில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டார். 15ம் தேதி அவருக்கு பெண் குழந்தை பிறந்தது.மருத்துவமனையில் அவருக்கு அறிமுகமான கொடுங்கையூரைச் சேர்ந்த அமுலுக் பவரோஸ் மேரி (29) என்ற பெண், டிஸ்சார்ஜ் செய்த பின்னர் வீட்டுக்கு அழைத்து செல்ல ஏற்பாடு செய்வதாக கூறி, கீதாவின் பிறந்து 9 நாட்களே ஆன குழந்தையை கடத்திச் சென்றார்.

இது தொடர்பாக, ராயபுரம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் வழக்குப்பதிந்து, குழந்தையை 5 மணி நேரத்தில் மீட்டனர்.மேலும், கடத்தலில் ஈடுபட்ட அமுலுக் பவரோஸ் மேரி, உடந்தையாக இருந்த அவரது கணவர் தாமஸ் (32) ஆகிய இருவரையும் கடந்த 24ம் தேதி கைது செய்தனர்.இந் நிலையில், விரைந்து செயல்பட்டு குழந்தையை மீட்ட தனிப்படை போலீஸாரான ராயபுரம் உதவி ஆணையர் பிரமானந்தன், காசிமேடு சட்டம் ஒழுங்கு காவல் நிலைய ஆய்வாளர் மைனர்சாமி, உதவி ஆய்வாளர் கோபிநாத், தலைமைக் காவலர்கள் ஜீவா, கோபிநாத், முத்துகுமார், இளங்கோவன் ஆகிய 7 பேரை சென்னை காவல் ஆணையர் அமல்ராஜ் நேற்று நேரில் அழைத்து வெகுமதி வழங்கி பாராட்டினார்.





## ஏஆர்டிஎஸ் அறக்கட்டளை மற்றும் மாயா பார்ட்டி ஹால் திறப்பு விழா

மாதவரம், மே 28-

மாதவரம் தொகுதி பாடியநல்லூர் ஊராட்சியில் ஏ.ஆர்.டி.எஸ். அறக்கட்டளை மற்றும் மாயா பார்ட்டி ஹால் திறப்பு விழா ஸ்ரீ சண்முகவேல் ஏஜென்சி உரிமையாளர்கள் எம்.சரவணன் மாயா, எம்.சங்கர் மாயா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக சமூக பொருளாதார முன்னேற்ற அறக்கட்டளை மற்றும் ஏஆர்டிஎஸ் அறக்கட்டளை நிறுவனத் தலைவர் லயன் டாக்டர் ஏ.ஆர். தர்மலிங்கம் யாதவ் ராணி சங்குபதி தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு ஏஆர்டிஎஸ் அறக்கட்டளை மற்றும் மாயா பார்ட்டி ஹாலை ரிப்பன்வெட்டி திறந்து வைத்தனர்.பின்னர் குத்துவிளக்கு ஏற்றிவைத்து அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினர். இதில் பாடியநல்லூர் சுற்றுவட்டார யாதவர் நலச் சங்க நிர்வாகிகள், குடும்பத்தினர்கள், நண்பர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 66 வது பழக்காட்சி




குன்னூர் மே,28-

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுத்தோறும் கோடை விழாவை முன்னிட்டு மலர்காட்சி, ரோஜா காட்சி, பழக்காட்சி மற்றும் மலைப்பயிர்கள் காட்சி உள்ளிட்ட பல்வேறு காட்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக குன்னூர் சிம்ஸ்ங்காவில் 66 பழக்காட்சி 2705 026 முதல் 30.05.2026 வரை 4 நாட்கள் கோலாகமாக நடைபெற உள்ளது. இவ்வாண்டு பழக்காட்சியின் சிறப்பம்சமாக 1.0 டன் எடை கொண்ட பேரிச்சம் பழங்களை கொண்டு பிரம்மாண்ட டைனோசர் (T.Rex வகை) வடிவமைப்பு பார்வையாளர்களை கவரும் விதமாக அமைந்துள்ளது. பழக்காட்சியின் அமசங்களாக பல்வேறு பழவகைகளை கொண்டு ஜீராசிக் பார்க் நுழைவு வாயில் (Jurassic Park (Gate) சிறிய வகை டைனோசர் (Triceratops) டைனோசர் முட்டை மற்றும் முட்டையிலிருந்து வெளி வருதல் (Dinisaur Hatchery with Eggs) தாவரங்களை உண்ணும் டைனோசர் ( Brachiosaurus) மற்றும் டைனோசர் காலத்து பறவை போன்ற வடிவடிமப்புகள் 4.5 டன் எடையுள்ள பழங்களை கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. தாவரங்க ளைகாட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அரசு மற்றும் அரங்ககள் போட்டியாளர் தோட்டக்கலைத்துறை மூலம் அரங்கு அமைத்து 160 வகையான பழங்கள் அரங்குகள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

.மேலும் தமிழ்சாட்டில் உள்ள பிற மாவட்டங்களின் பழ வகைகளை வீதமாக பல்வேறு காட்சி திடல்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதில் கோயம்புத்தூர், தர்ம ர் தர்மபுரி, ஈரோடு, கரூர், கிருஷ்ணகி மற்றம் தென்காசி போன்ற மாவட்டங்களை தோட்டக்கலை துறையினரால் அதியமான் கோட்டை, அணை, கழுகு மற்றும் வீணை போன்ற உருவங்கள் காட்சி ப்படுத்தப்பட்டுள்ளது. இருவாச்சி உறவை, மரகதபுறா, இரட்டைமயில், பவானிசாகர் என்ற பல்வேறு பழங்களை கொண்டு விதவிதமானஇவ்வருடம் சுற்றுலா பயணிகள் மற்றும் பொது மக்கள் கண்டுகளிக்கும் வகையில் பல்வேறு விதமான கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளது. தோட்டக்கலைத் துறையின் மூலம்66வது பழக்காட்சியானது 27 5 2026 முதல் 30.05.2026 வரை நான்கு நாட்கள் நடைபெற உள்ளதால் சற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் வருகை புரிந்து இக்காட்சியினை கண்டு ரசி தோட்டக்கலைத்துறையின் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது

இந்த பழக்காட்சியில் நீலகிரி மாவட்ட தோட்டகலை இணை இயக்குநர் நவநீதா குன்னூர் சிம்ஸ்பூங்கா தோட்டகலை துறை உதவி இயக்குநர் விஜயலக்ஷ்மி குன்னூர் சிம்ஸ்பூங்கா மேலாளர் நித்யா உட்பட தோட்ட கலை துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.குன்னூர் சிம்ஸ் பூங்காவில் நடைபெறும் 66 வது பழக்காட்சியினை வெளி மாநில மற்றும் வெளி மாவட்ட சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் பொது மக்கள் கண்டு ரசித்தனர்.

## பர்கூரில் திமுக தேர்தல் கள ஆய்வு கூட்டம்



கிருஷ்ணகிரி,மே,28-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூரில் நடைபெற்ற திமுக தேர்தல் கள ஆய்வு கூட்டத்தில் திருவண்ணாமலை எம்.பி அண்ணாதுரை கலந்து கொண்டு தேர்தல் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மாநில மகளிரணி சமூக வலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில், முன்னாள் எம்.எல்.ஏ மதியழகன், முன்னாள் எம்.பி சுகவனம் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர். வாக்குச்சாவடி வாரியான நிலவரங்கள் மற்றும் எதிர்கால தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டதுடன், கழக நிர்வாகிகள் தங்களது கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

## எரிபொருள் விலை உயர்வு உள்நாட்டு விமான சேவைகளை 22% குறைக்க ஏர் இந்தியா திட்டம்

டெல்லி: மே.28-

எரிபொருள் விலை உயர்வால் உள்நாட்டு விமான சேவைகளை 22 சதவீதம் வரை குறைக்க ஏர் இந்தியா நிறுவனம் திட்டமிட்டுள்ளது. நஷ்டத்தில் இயங்கும் இந்த விமான நிறுவனம், தனது சர்வதேச விமான சேவையை ஏற்கனவே சுமார் 27 சதவீதம் குறைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தற்போது வாரத்திற்கு சுமார் 4,400 விமானங்களை இயக்கும் நிலையில் இப்போது சுமார் 3,600 விமானங்கள் உள்நாட்டிலும் மீதமுள்ள 800 விமானங்கள் சர்வதேச சேவைகளாகவும் ஏர் இந்தியா நிறுவனம் வழங்கி வருகிறது. இதனிடையே ஜூன் மற்றும் ஆகஸ்ட் மாதம் வரை சர்வதேச சேவைகளில் முன்னர் அறிவித்திருந்த மாற்றங்களின் தொடர்ச்சியாக, அதே காலகட்டத்தில் சில உள்நாட்டு வழித்தடங்களில் விமானங்களின் எண்ணிக்கையை குறைத்து தற்காலிக நடவடிக்கை எடுத்துள்ளதாக ஏர் இந்தியா கூறியுள்ளது.

## திருவள்ளூர் - சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்தவருக்கு 10 ஆண்டுகள் சிறை



திருவள்ளூர்: மே.28-

கும்மிடிப்பூண்டி எளாவூர் பகுதியை சேர்ந்த 15 வயது சிறுமி, கடந்த 2023ம் ஆண்டு வீட்டில் தனியாக இருந்தார். எளாவூரை அடுத்த மேட்டுக்குப்பத்தைச் சேர்ந்த ஜெகநாதன் (35), வீட்டுக்குள் நுழைந்து, சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில், கும்மிடிப்பூண்டி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கு விசாரணை, திருவள்ளூர் மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது.அரசு தரப்பில் வழக்கறிஞர் புவனேஸ்வரி ஆஜராகி வாதாடினார். ஜெகநாதன் மீதான குற்றங்கள் நிரூபணமானதையடுத்து, மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்ற உமாமகேஸ்வரி ஜெகநாதனுக்கு, வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த குற்றத்துக்கு 10 ஆண்டு சிறை, ரூ.10,000 அபராதம், பாலியல் தொல்லை கொடுத்த குற்றத்துக்கு 5 ஆண்டு சிறை, ரூ.10,000 அபராதம் விதித்தார். சிறுமிக்கு ரூ.1 லட்சம் ஒரு லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் அரசுக்கு நீதிபதி பரிந்துரைத்துள்ளார். செங்குன்றம் அருகே 5 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்தவருக்கு 17 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## வங்கதேசத்தில் மழைக்கு நடுவே ரயிலின் மேற்கூரையில் அமர்ந்து பயணிக்கும் இளைஞர்கள்

டாக்கா:மே,28-

வங்கதேசத்தில் மழையில் நனைந்தபடி ரயிலின் மேற்கூரையில் நின்று கொண்டும், உட்கார்ந்து கொண்டும் ஆபத்தான முறையில் பயணம் மேற்கொண்ட இளைஞர்களின் வீடியோ சோஷியல் மீடியாக்களில் வைரலாகி வருகிறது.பக்ரீத் பண்டிகையை ஒட்டி வங்கதேச தலைநகர் டாக்காவில் பணிபுரிந்து வரும் பல வெளியூர் மக்கள், பண்டிகையை கொண்டாட தங்கள் சொந்த ஊருக்கு கூட்டம் கூட்டமாக புறப்பட்டு சென்று வருகின்றனர். இதன் காரணமாக ரயில் மற்றும் பேருந்து நிலையங்களில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. ரயில் பெட்டிகளுக்குள் அமர்ந்து செல்ல மற்றும் நின்று கொண்டே செல்ல கூட இடம் கிடைக்காதவர்கள், தங்கள் ஊருக்கு செல்லும் ரயிலின் மேற்கூரையின் மேல் ஏறி பயணம் செய்தனர். அதுவும் தற்போது அங்கு மழை பெய்து வரும் நிலையில் வைரலாகி வரும் வீடியோவில், சில இளைஞர்கள் கனமழை பெய்து கொண்டிருக்கும் போதே ரயிலின் மேற்கூரையின் மீதேறி உட்கார்ந்தபடியும், நின்று கொண்டும் ஆபத்தான முறையில் பயணம் செய்வது பதிவாகி இருக்கிறது.

பண்டிகை கொண்டாடங்களின் போது தங்கள் சொந்த ஊருக்கு செல்ல லட்சக்கணக்கான மக்கள் ஒரேநேரத்தில் முக்கிய ரயில் நிலையங்களில் குவிவதால் ரயில்களில் இடம் கிடைக்காமல், மக்கள் ரயிலின் மேற்கூரையின் மேல் ஏறி பயணம் செய்வது அங்கு வாடிக்கையாக உள்ளது. அவ்வப்போது ரயில்களின் மேற்கூரையில் கம்பிகள், பாலங்கள் மற்றும் மரக்கிளைகள் மோதி பலர் காயமடையும் சம்பவங்களும் நடக்கின்றன

## தேனி மாவட்டம்சிறுவர், சிறுமியர்களுக்கான கோடைகால சிறப்பு பயிற்சி முகாமின்நிறைவு நாள் நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்



தேனி மே,28-

தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் சமூக நலத்துறை சார்பில் நடத்தப்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கான கோடை சிறப்பு முகாமின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் அவர்கள் மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். பள்ளி மாணவர்களின் கோடை விடுமுறையினை புதிய திறன்களை கற்றுக்கொள்ளும் ஒரு வாய்ப்பாக மாற்றுவதை நோக்கமாக கொண்டு, மாணவர்களின் விருப்பம் மற்றும் தனித்திறமைகளை கண்டறிந்து, அவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக சிறுவர் சிறுமியர்களுக்கு கோடைகால சிறப்பு முகாம் நடத்த திட்டமிடப்பட்டு 06.05.2026 அன்று பெரியகுளம் வட்டம், இலட்சுமிபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தொடங்கி வைத்தார். இம்முகாமில் யோகா, சிலம்பம், ஓவியம், சதுரங்க, நடனம், இயற்கை உரம் தயாரித்தல் முறை ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டது. மேலும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பில் மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்பிற்கான யுக்திகள்தொடர்பான கருத்தரங்கம் நடத்தப்பட்டது.இன்று நிறைவு நாள் நிகழ்ச்சி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்முகாமில் பங்கேற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் பரிசு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் வழங்கினார். அதனைத் தொடர்ந்து இம்முகாமில் பங்கேற்ற மாணவ, மாணவியர்கள் தங்களின் பயிற்சி அனுபங்களை எடுத்துரைத்தார்கள். மேலும், இத்தகைய முகாமினை சிறப்பாக ஏற்பாடு செய்த சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கும், இம்முகாமில் ஆர்வமுடன் பங்கேற்ற சிறுவர், சிறுமியர்களுக்கு பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தெரிவித்தார் இந்நிகழ்வில் மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி விஷ்ணு பிரியா, மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் (மகளிர் அதிகார மையம்) சாருமதி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், மற்றும் முகாம் பயிற்சியாளர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




# செங்குன்றத்தில் 10ம், 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்கள் பிடித்த மாணவமாணவிகளுக்கு பாராட்டு விழா

மாதவரம், மே.28-

மாதவரம் தொகுதி செங்குன்றம் மணி டெக்ஸ்டைல்ஸ் தி கிராண்ட் சார்பில் ரெட்ஹில்ஸ் சுற்றுவட்டார பகுதிகளில் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் பள்ளி அளவில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளி மாணவ மாணவிக்கு பாராட்டு மற்றும் பரிசு வழங்கும் விழா உரிமையாளர் ஆரோக்கியதாஸ் தலைமையில் நடைபெற்றது.விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி கல்வி மாவட்ட கல்வி அலுவலர் பிரேம், தனியார் பள்ளி முதல்வர் லிசிமஞ்சலி, அரசு பள்ளி ஆசிரியர்கள் இம்மானுவேல்சுந்தர், கீதாலட்சுமி, சமூக ஆர்வலர் ஐய்வர்யா ஆகியோர் கலந்து கொண்டு 10ம் மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் வெற்றி பெற்ற 177 மாணவ மாணவிகளுக்கு பொன்னாடை போர்த்தி பரிசு மற்றும் கிப் வவுச்சரையும் வழங்கினர். முதலிடம் பெற்ற மாணவ மாணவிகளுக்கு ரூ. 2000 மதிப்புள்ள கிப்ட் வவுச்சரும், இரண்டாமிடத்திற்கு ரூ. 1500 மதிப்புள்ள கிப்ட் வவுச்சரும், மூன்றாமிடத்திற்கு ரூ. 1000 மதிப்புள்ள கிப்ட் வவுச்சரும் வழங்கப்பட்டது. இதில் மாணவ மாணவிகள், பெற்றோர்கள், பள்ளி முதல்வர்கள், பொதுமக்கள், வாடிக்கையாளர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# காமன்வெல்த் செஸ்: இனியன் சாம்பியன்

ஈரோடு: மே.28-

இலங்கையில் கடந்த 16ம் தேதி தொடங்கிய காமன்வெல்த் செஸ் சாம்பியன் ஷிப் 2026 போட்டி நேற்று நிறைவடைந்தது.இதில், இந்தியாவைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் ஈரோடு பா.இனியன் ரேபிட் மற்றும் பிளிட்ஸ் பிரிவுகளில் தலா 7 ஆட்டங்களில் 6.5 புள்ளிகள் பெற்று இரு பிரிவுகளிலும் தங்கப்பதக்கம்



வென்று சாம்பியன் பட்டம் பெற்றார்.ரேபிட் பிரிவில் ஸ்ரீஹரி வெள்ளிப்பதக்கத்தையும், மித்ரபா வெண்கலத்தையும் வென்றனர். பிளிட்ஸ் பிரிவில் ரோஹித் கிருஷ்ணா வெள்ளிப் பதக்கத்தையும், ஸ்ரீஹரி வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.கிளாசிக்கல் பிரிவில் மித்ரபா சாம்பியன்பட்டம் வென்றார். ரணிந்து லியானகே வெள்ளிப்பதக்கத்தையும், ஸ்ரீஹரி வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

# பந்தலூர்: வாழைகளை சேதம் செய்த காட்டுயானைகள் விவசாயிகள் வேதனை

பந்தலூர், மே.28-

நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட செட்டிவயல் பகுதியில் ஏராளமான மக்கள் வசித்து வருகின்றனர். இங்கு பெரும்பாலும் வாழை, பக்கு, காபி, தேயிலை, உள்ளிட்ட பயிர்களை விவசாயம் செய்து வருகிறார்கள் இந்நிலையில் இரண்டு நாட்களுக்கு முன்பு மணியளவில் 7 காட்டுயானைகள் குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து, அப்பகுதியில் பயிரிடப்பட்டிருந்த வாழைத் தோட்டங்கள் பாக்கு மற்றும் பிற பயிர்களை முற்றிலும் சேதப்படுத்தியது. இதனால் விவசாயிகள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.



தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர். ஏற்கனவே செட்டிவயல் பகுதியில் மக்கள் முறையான சாலை வசதி தெருவிளக்கு வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லாமல் நீண்ட நாட்களாக மக்கள் பல்வேறு சிரமங்களை சந்தித்து வருகின்றனர். இந்நிலையில், தற்போது காட்டுயானைகள் தாக்குதலால் அவர்களின் வாழ்வாதாரம் மேலும் பாதிப்படைந்துள்ளது. எனவே, தமிழக அரசும், வனத்துறை அதிகாரிகளும் உடனடியாக இப்பகுதியில் ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். மேலும், காட்டுயானைகள் மீண்டும் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழையாத வகையில் நிரந்தர தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். செட்டிவயல் பகுதிக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் சாலை வசதிகளை விரைந்து ஏற்படுத்தித் தர வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இரவு நேரங்களில் யானைகள் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் அச்சத்துடன் உள்ளனர். வனத்துறையினர் ரோந்துப் பணியை தீவிரப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை எழுந்துள்ளது.

# செங்கல் சூளை உரிமையாளர்களிடம் மாமூல் கேட்டு மிரட்டல்: தவெக ஒன்றிய செயலாளர் நீக்கம்

வேலூர்: மே.28-

வேலூர் மாவட்டம் கணியம்பாடி பகுதிகளில் செங்கல் சூளை உரிமையாளர்களை மிரட்டி மாதம் ரூ.1 லட்சம் மாமூல் கேட்ட விவகாரத்தில் தவெக ஒன்றிய செயலாளரின் பதவியை பறித்ததுடன், கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும் அவர் நீக்கப்பட்டுள்ளார்.வேலூர் மாவட்டம் கணியம்பாடி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கணியம்பாடி புதூர், நெல்வாய், வல்லம் உள்ளிட்ட பகுதிகளில் 50க்கும் மேற்பட்ட செங்கல் சூளைகள் உள்ளன.தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில் கணியம்பாடி கிழக்கு ஒன்றிய தவெக செயலாளர் விஜயகுமார் மற்றும் நிர்வாகிகள் கடந்த 22ம் தேதி செங்கல் சூளை உரிமையாளர்களிடம் மாதம் ரூ.1 லட்சம் மாமூல் கொடுத்தால்தான் தொழில் செய்ய முடியும் என கேட்டு மிரட்டியதாகக் கூறப்படுகிறது.



இதுதொடர்பான, வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவியதால் சலசலப்பு ஏற்பட்டது. மேலும், பாதிக்கப்பட்ட செங்கல் சூளை உரிமையாளர்கள் வேலூர் கிராமிய காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.அதன்மீது போலீஸார் நடவடிக்கை எடுக்காமல் செங்கல் சூளை உரிமையாளர்களை சமாதானம் செய்ய முயன்றனர். ஆனால், போலீஸார் நடவடிக்கை எடுக்காததை கண்டித்து கணியம்பாடி காவல் நிலையம் அருகேயுள்ள வேலூர்திருவண்ணாமலை கூட்டுச்சாலை சந்திப்பில் நேற்று முன்தினம் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.இதில், செங்கல் சூளை உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் உட்பட 300க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். பின்னர் மறியல் செய்தனர். இதையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார் பேச்சுவார்த்தை நடத்தினார்.அதில், புகாருக்குஉள்ளான தவெக நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர். இதனையேற்று போராட்டம் முடிவுக்கு வந்தது.இந்நிலையில், கட்சியின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் செயல்பட்டதாக தவெக கணியம்பாடி கிழக்கு ஒன்றிய செயலாளர் டி.விஜயகுமார் கட்சியின் அடிப்படை உறுப்பினர் உட்பட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் நீக்கம் செய்து தவெக ராணிப்பேட்டை மேற்கு மாவட்டச் செயலாளர் ஜி. விஜய் மோகன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# தேனி மாவட்டம்பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்த நிறுவனம் மற்றும் சமூக சேவகர்கள் விருது பெற விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தகவல்

தேனி, மே.28-

தமிழ்நாடு அரசின் சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் ஒவ்வொரு ஆண்டும் பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்த தொண்டு நிறுவனம் மற்றும் சிறந்த சமூக சேவகர்களுக்கான விருது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, 2026ஆம் ஆண்டிற்கு 15.08.2026 சுதந்திர தினத்தன்று பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்த நிறுவனத்திற்கு ரூ.1,00,000/ ரொக்கப்பரிசு (ம) சான்றிதழும் மற்றும் சிறந்த சமூக சேவர்களுக்கான விருதிற்கு ரூ.50,000/ ரொக்கப்பரிசு (ம) சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.




இவ்விருது பெற தமிழ் நாட்டை பிறப்பிடமாக கொண்டவரா கவும், 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் சமூக நலன் சார்ந்த நடவடிக்கைகள், பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையிலான நடவடிக்கைகள், மொழி, இனம், பண்பாடு, கலை, அறிவியல், நிர்வாகம் போன்ற துறைகளில் மேன்மையாக பணிபுரிந்து, மக்களுக்கு தொண்டாற்றும் வகையில் தொடர்ந்து பணியாற்றும் சமூக சேவகர் மற்றும் தொண்டு நிறுவனங்கள் (அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக இருத்தல் வேண்டும்) இவ்விருது பெற https://awards.tn.gov.in என்ற இணையதளத்தில் 19.06.2026 க்குள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரரின் சுயவிவரம் (Bio Data), சுயசரிதை மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம்2 (Passport Size Photo), ஒரு பக்கம் தனியரைப் பற்றிய விபரம் தமிழ் (மருதம் எழுத்துருவில்) மற்றும் ஆங்கிலம் (Verdana எழுத்துருவில்) (Soft and Hard Copy) மாவட்ட சமூக நல அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் தனியரால் சமர்பிக்கப்பட வேண்டிய கையேட்டில் தேசிய மற்றும் உலகளாவிய விருதுகளின் விவரம் (விருது பெற்றிருப்பின் அதன் விவரம் / விருதின் பெயர் / யாரிடமிருந்து பெறப்பட்டது மற்றும் பெற்ற வருடம்) சேவையை பாராட்டி வெளியிடப்பட்ட பத்திரிக்கை செய்தி தொகுப்பு, சேவை பற்றிய செயல்முறை விளக்கம் புகைப்படத்துடன் இணைக்கப்பட வேண்டும். சமூக சேவையாளரின்/ நிறுவனத்தின் சேவை மூலமாக பயனாளிகள் பயனடைந்த விபரம், தொண்டு நிறுவனத்தின் பதிவு, உரிமம், ஆண்டறிக்கை இணைக்கப்பட வேண்டும். சமூகப் பணியாளர் இருப்பிடத்தின் அருகில் உள்ள காவல் நிலையத்திலிருந்து பெறப்பட்ட குற்றவியல் நடவடிக்கைகள் ஏதும் இல்லை என்பதற்கான சான்று ஆகிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். இணையதளம் வாயிலாக பெறப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இவ்விருதிற்கு மேற்கண்ட தகுதிகளை உடைய தேனி மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியான நபர்கள் மேற்குறிப்பிட்ட இணையதளம் வாயிலாக விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். மேலும், விண்ணப்பத்தின் அனைத்து ஆவணங்களையும் (2 நகல்களில்) மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் செயல்படும் மாவட்ட சமூகநல அலுவலகத்தில் 22.06.2026 க்குள் சமர்ப்பிக்குமாறும் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங் தெரிவித்துள்ளார்.

# கோவை அருகே சிறுமி கொல்லப்பட்ட விவகாரம்: குற்றப்பத்திரிகை தயாரிப்பில் போலீஸார் தீவிரம்

கோவை: மே.28-

கோவை அருகே சிறுமி பாலியல் வன்கொடுமை செய்து கொல்லப்பட்ட வழக்கில், குற்றப்பத்திரிகையை தயாரிக்கும் பணியை காவல்துறையினர் தீவிரப்படுத்தி உள்ளனர்.கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தம்பதியின் 10வயது மகள், கடந்த 21ம் தேதி பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட சம்பவம் தமிழகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதுதொடர்பாக, சிறுமியின் பக்கத்து வீட்டை சேர்ந்த கார்த்திக், நண்பர் மோகன்ராஜ் ஆகியோரை போக்சோ மற்றும் கடத்தல் பிரிவுகளில் வழக்கு பதிந்து சூலூர் போலீஸார் கைது செய்தனர்.போலீஸாரிடம் இருந்து தப்ப முயன்ற கார்த்திக் மாடியில் இருந்து கீழே குதித்ததில் அவரது கால், கை முறிந்தது. அவர் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவ



மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மோகன்ராஜ் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.இச்சம்பவம் தொடர்பாக குற்றப்பத்திரிகை தயாரிக்கும் பணியை போலீஸார் தீவிரப்படுத்தியுள்ளனர். இதுதொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில், மேற்கு மண்டல ஐஜி ரம்யா பாரதி தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.இவ்வழக்கு தொடர்பான குற்றப்பத்திரிகை தயாரிப்புப் பணியை தீவிரப்படுத்துதல், கைது செய்யப்பட்ட இருவரையும் காவலில் எடுத்து விசாரித்தல், இந்த வழக்குக்கு தேவையான அறிவியல் பூர்வமான ஆதாரங்களை திரட்டுதல், வழக்கு தொடர்பாக கண்டறியப்பட்ட சாட்சிகளை முறைப்படுத்தி விசாரணைக்கு ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்தல் குறித்து ஆலோசிக்கப்பட்டது. சிறுமி கடத்தப்பட்ட இடம், அடைக்கப்பட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட இடம், சடலமாக மீட்கப்பட்ட இடம் ஆகிய இடங்களில் போலீஸார் ஆய்வு நடத்தி தகவல்களை சேகரித்து வருகின்றனர்.

**ந. க. எண்.9799/25/ஆ 6**
**உயர்திரு வருவாய் கோட்டாசியர் அவர்கள், திண்டுக்கல்**

திரு. காளிமுத்து
த/பெ. பழனிச்சாமி
சுந்தரராஜபுரம்
செங்கட்டாம் பட்டி
கிராமம் நிலக்கோட்டை
வட்டம்,திண்டுக்கல் மாவட்டம்.
...மனுதாரர்
எதிர்
1. வருவாய் கோட்டாசியர் அவர்கள் திண்டுக்கல்.
2. வருவாய் வட்டாட்சியர் நிலக்கோட்டை..
...எதிர் மனுதாரர்

பொது அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தந்தை பழனிச்சாமி அவர்கள் கடந்த 10.06.1982 அன்று காளிமுத்து த/பெ. பழனிச்சாமி சுந்தரராஜபுரம் செங்கட்டாம் பட்டி கிராமம் நிலக்கோட்டை வட்டம்,திண்டுக்கல் மாவட்டம் என்ற விலாசத்தில் இயற்கை மரணம் அடைந்ததற்கான இறப்பு சான்றிதழ் கோரி விண்ணப்பித்துள்ளார். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின், இவ்வறிவிப்பு கண்ட 7 நாட்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரர் கோரியபடி மனு உத்தரவாகும் என்பதை இதன் மூலம் அறியவும்.

வருவாய் கோட்டாசியர்
திண்டுக்கல் மாவட்டம்..

**வருவாய் கோட்டாட்சியர்**
**உட்கோட்ட நிர்வாக நடுவர்**
**(ம) நீதிமன்றம்**
**சிவகங்கை**
**ந.க.ஆ 1/650/2018**

மூக்கன்
த/பெ அங்கமுத்து
வீராணி கிராமம்
காளையார்கோவில் வட்டம்...
மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாயார் பொட்டச்சி என்பவர்கடந்த 08/03/1967அன்று மேற்படி மனுதாரர் முகவரியில் இறந்ததை பதிவு செய்ய அறியாமையால் தவறிவிட்டார். மேற்படி இறப்பை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 10 தினங்களுக்குள் சிவகங்கை கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவிக்கலாம்

மனுதாரர்
மூக்கன்
த/பெ அங்கமுத்து
வீராணி கிராமம்
காளையார் கோவில் வட்டம்

# தேனி மாவட்டம்விவசாயிகள்குறைதீர்க்கும் நாள் கூட்டம் 29.05.2026 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் நடைபெற உள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தகவல்

தேனி மே.28-

தேனி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 29.05.2026வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் நடைபெறவுள்ளது.தேனி மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் அந்தந்த




வட்டாரத்தில் உள்ள வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை திட்டங்கள் குறித்த கோரிக்கைகளை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் மனுக்களாக வழங்கலாம். விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள், சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி அதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத்சிங், தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் 11 மாவட்டங்களுக்கு கனமழை: வானிலை ஆய்வு மையம்

சென்னை: மே.28-

தமிழகத்தில் 11 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் வெயில் வாட்டி வரக்கூடிய சூழலில் ஒரு சில பகுதிகளில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது.அதன்படி இன்று 11 மாவட்டங்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருக்கிறது. தேனி, மதுரை, நீலகிரி, கோவை, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், கரூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் அளித்துள்ளது



# தேனி மாவட்டம்வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

தேனி, மே.28-

தேனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, 30.06.2026 அன்றைய தேதிப்படி குறைந்தபட்சம் ஐந்தாண்டுகளுக்கும் மேலாக காத்திருப்போருக்கு அரசால் உதவித்தொகை வழங்கப்படுகிறது. தற்போது இத்திட்டத்தின்படி காலாண்டு ஒன்றுக்கு எஸ்.எஸ்.எல்.சி. தோல்வி கல்வித் தகுதியை பதிவு செய்தவர்களுக்கு ரூ.600/ம், எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பதிவு செய்தவர்களுக்கு ரூ.900/ம், மேல்நிலை வகுப்பு தேர்ச்சி பதிவு செய்தவர்களுக்கு ரூ.1200/ம், பட்டம் மற்றும் முதுகலைப் பட்டம் படித்து பதிவு செய்தவர்களுக்கு ரூ.1800ம், மூன்று



வருடங்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படுகிறது. மாற்றுத்திறனாளி மனுதாரர் எனில் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பதிவு செய்து, குறைந்தபட்சம் ஒரு வருடம் நிறைவு செய்திருந்தாலே போதுமானது. இவ்வாறான மனுதாரர்களின் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி மற்றும் அதற்கு கீழான தகுதி வரை பதிவு செய்தவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.600/ம், மேல்நிலைக் கல்வித் தகுதியை பதிவு செய்தவர்களுக்கு ரூ.750ம், பட்டதாரிகள் எனில் ரூ.1000/ம், பத்து வருடங்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற கீழ்க்காணும் தகுதிகளை பதிவுதாரர்கள் பெற்றிருக்க வேண்டும்.1. 31.03.2026 அன்றைய தேதிப்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 45 வயதிற்கு மிகாமலும், ஏனையோரைப் பொறுத்த மட்டில் 40 வயதிற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.2. மனுதாரர்களின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மாற்றுத்திறனாளி மனுதாரர் எனில் குடும்ப ஆண்டு வருமானத்திற்கு உச்ச வரம்பு கிடையாது.3. பொறியியல், மருத்துவம், விவசாயம், கால்நடை மருத்துவம், சட்டம் போன்ற தொழிற்கல்வி பட்டதாரிகள் இந்த உதவித் தொகை பெற தகுதியில்லாதவர்கள்.4.விண்ணப்பதாரர் அரசுத்துறை அல்லது தனியார் துறையில் எந்தவிதமான ஊதியம் பெரும் பணியிலோ அல்லது சுயவேலைவாய்ப்பில் ஈடுபடுபவராகவோ இருத்தல் கூடாது. மேலும், விண்ணப்பதாரர் தனியாரிடமிருந்தோ அல்லது அரசிடமிருந்தோ வேறு எந்த வகையில் எந்தவிதமான உதவித்தொகையும் பெறுபவராக இருத்தல் கூடாது.இந்த உதவித்தொகை பெறுவதற்கு தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி மையத்தில் பதிவு செய்துள்ள பதிவுதாரர்கள் http://tnvelaivaaippu.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து அனைத்து கலங்களையும் முழுமையாக பூர்த்தி செய்து சமர்ப்பிக்கலாம் அல்லதுதேனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலரை தொடர்புகொண்டு விண்ணப்பத்தினை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், தெரிவித்துள்ளார்.



■ செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செங்கல்பட்டு மாவட்ட சுகாதாரத்துறை 108 ஆம்புலன்ஸில் சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் தொழில்நுட்பவியலருக்கு கேடயம் மற்றும் பதக்கங்களை மாவட்ட ஆட்சியர் .எஸ்.மாலதி ஹெலன்,வழங்கி பாராட்டுக்களை தெரிவித்தார்கள். இதில், இணை இயக்குநர் (சுகாராரம்) .மலர்விழி, துணை இயக்குநர் சுகாதாரம் சதிஷ் குமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திறந்தவெளி மதுக்கூடமாக மாறும் காஞ்சாத்துமலை

# "வனத்தை காப்பாற்ற அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்"ஓய்வு பெற்ற நீதிபதி செல்வம் வேதனை





சிவகங்கை, மே.28-

சிவகங்கை மாவட்டம் பூலாங்குறிச்சி அருகே உள்ள காஞ்சாத்துமலை, தற்போது சமூக விரோத செயல்களின் கூடாரமாக மாறி வருவதாக பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கவலை தெரிவித்து வருகின்றனர்.சிவகங்கை ஸ்ரீ புதுக்கோட்டை மாவட்ட எல்லையில் பரந்து விரிந்துள்ள இந்த மலைப்பகுதி, அரிய வகை மூலிகை தாவரங்கள் நிறைந்த இயற்கை வளப்பகுதியாகவும், சித்தர்கள் தவம் செய்யும் ஆன்மீக தலமாகவும், வனவிலங்குகள் பாதுகாப்பாக வாழும் பகுதியாகவும் இருந்து வருகிறது.ஆனால் கடந்த சில ஆண்டுகளாக காவல்துறை மற்றும் வனத்துறையினர் போதிய கண்காணிப்பு மேற்கொள்ளாததால், காஞ்சாத்துமலை திறந்தவெளி மதுக்கூ ணடமாகவும், கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் விற்பனை செய்யப்படும் இடமாகவும் மாறிவிட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மேலும், பாலியல் தொழில் நடைபெறுவதோடு, இரவு நேரங்களில் வனவிலங்குகள் வேட்டைய ாடப்படுவதாகவும் கூறப்படுகிறது.இது குறித்து பூலாங்குறிச்சியை சேர்ந்த சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி செல்வம், காவல்துறை மற்றும் வனத்துறையினரிடம் பலமுறை மனுக்கள் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என வேதனை தெரிவித்தார்.

காஞ்சாத்துமலையை பாதுகாக்க கூடுதல் காவலர்களை நியமித்து, மலைப்பகுதிக்குச் செல்லும் சாலைகளில் சோதனைச் சாவடிகள் அமைத்து காவல்துறையும் வனத்துறையும் இணைந்து தீவிர கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.மேலும், ஆன்மீக பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மானாமதுரையில் இன்ஜினியரிங் தொழிலாளர்கள் மாபெரும் மருத்துவ விடுப்பு போராட்டம்

மானாமதுரை, மே.28-

சிவகங்கை முதல் பரமக்குடி வரையிலான இன்ஜினியரிங் தொழிலாளர்களின் முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தி, SRMU மானாமதுரை கிளை சார்பில் மாபெரும் மருத்துவ விடுப்பு (Mass Sick) போராட்டம் நடைபெற்றது.மதுரை கோட்டச் செயலாளர் ஜே.எம்.ரபிக் மற்றும் கோட்டத் தலைவர் செந்தில்குமார் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி, கிளை பொறுப்பாளர் சீத்தாராமன் முன்னிலையில் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, மதுரை கோட்ட இன்ஜினியர் DEN/N அறிவுறுத்தலின் பேரில், சிவகங்கை இன்சார்ஜ் அப்துல் ரகுமான் தொழிலாளர்களை சந்தித்து கோரிக்கைகளை அறிக்கையாக பெற்றார். மேலும், தொழிலாளர்கள் குற்றம்சாட்டிய JE/PWAY/MNM மீது நேரடி விசாரணை நடத்தப்பட்டு அறிக்கை பெறப்பட்டது. தொழிலாளர்களின் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க மதுரை கோட்ட இன்ஜினியரிங் கவுன்சில் சேர்மன் ரவிக்குமார், விஜேயந்திரன் உள்ளிட்டோர் முன்னெடுத்தனர். போராட்டத்தை முன்னின்று நடத்திய கிளை உதவி தலைவர் இருளப்பன், கிளை செயலாளர் பாலமுருகன் மற்றும் கிளை நிர்வாகிகளுக்கு SRMU மானாமதுரை கிளை சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.





# டில்லியில் முதல்வர் விஜய்க்கு போலீஸ் அணிவகுப்பு மரியாதை

புதுடில்லி: மே.28-

டில்லி சென்ற முதல்வர் விஜய்க்கு போலீஸ் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. அவர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

தமிழக முதல்வராக, கடந்த 10ம் தேதி விஜய் பதவியேற்றார். முதல்வரான பின், முதல் முறையாக, இன்று காலை 9:30 மணிக்கு தனி விமானத்தில் விஜய் புறப்பட்டு சென்றார். டில்லி சென்றுள்ள முதல்வர் விஜய், அங்குள்ள தமிழ்நாடு இல்லத்துக்கு சென்றார்; தலைமைச் செயலாளர் சாய்குமார் உள்ளிட்ட அதிகாரிகள் வரவேற்பு அளித்தனர். அங்கு அவருக்கு போலீஸ் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. அவர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

# பத்திரம் காணவில்லை

**கருப்புச்சாமி**
**த/பெ ராமர்**
**க. எண். 101ஆதிதிராவிடர் மேற்கு, 9வது வார்டு ஆயக்குடி**
**பழனி வட்டம்,**
**திண்டுக்கல் மாவட்டம்,**

**திண்டுக்கல் மாவட்டம், பழனி ரிடி, பழனி சப்டி நிர் 1, பழனி வட்டம், 95 கிழக்கு ஆயக்குடி கிராமப்புல சர்வே எண்கள். 205/6, 203/1, 205/1ல் ஆக மொத்தம் நஞ்சை ஏக் 3 செ 67 அளவுள்ள நிலத்தை மனையிடங்களாகப் பிரித்து விற்பனை செய்யப்பட்டுள்ள மனையிடங்களில் பிளாட் எண். 3க்குச் சதுரடி 1200ல் உள்ள சொத்து சம்பந்தமாக கடந்த 19.08.2002ம் தேதியன்று பழனி 1 நிர் இணைசார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 973/2002ம் எண்ணாக பதிவு செய்யப்பட்டதுமான அசல் கிரைம் பத்திரம் சென்ற 01.05.2026ம் தேதியன்று பழனி வட்டம், ஆயக்குடி மெயின் ரோட்டில் உள்ள மதினா ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுக்க செல்லும் தவறிவிட்டது**

**மேற்படி அசல் கிரைய பத்திரம் யாருக்கேனும் கிடைக்கப் பெற்றால் அருகில் உள்ள காவல் நிலையத்தில் ( அ) கீழ்க்கண்ட முகவரியில் தெரிவிக்கவும்.**

**R.கருப்பசாமி**
**மஞ்சுளா**
**செல்:97918 30409**
**க.எண். 101ஆதிதிராவிடர் மேற்கு, 9வது வார்டு ஆயக்குடி**
**பழனி வட்டம்,**
**திண்டுக்கல் மாவட்டம்,**

# மனு அளித்த சில மணி நேரங்களிலேயே நடவடிக்கை: அதிகாரிகளுக்கு தமிழக வெற்றிக் கழகம் நன்றி







மானாமதுரை, மே.28-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தமிழக வெற்றிக் கழகத்தின்மேற்கு ஒன்றியம் சார்பில் பொதுமக்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி அதிகாரிகளிடம் வழங்கப்பட்ட மனுவின் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு அதிகாரிகளுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.நேற்று அளிக்கப்பட்ட மனுவில் இடம்பெற்றிருந்த மின்தடை மற்றும் அடிப்படை வசதி தொடர்பான பிரச்சினைகளை ஆய்வு செய்த அதிகாரிகள், தாமதமின்றி களத்தில் இறங்கி நடவடிக்கை மேற்கொண்டனர். இதையடுத்து, இராஜகம்பீரம் உதவி மின் நிலைய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், மானாமதுரை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் மக்கள் நலப்பணியை பாராட்டி, தமிழக வெற்றிக் கழகத்தின் மானாமதுரை மேற்கு ஒன்றியம் சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகள் தெரிவிக்கப்பட்டன.மக்கள் அளித்த கோரிக்கைகளுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டதால், அப்பகுதி மக்களிடையே மகிழ்ச்சியும் நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளதாக நிர்வாகிகள் தெரிவித்தனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன் குமார், இ.ஆ.ப., தலைமையில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலாளர் கொ. வீர ராகவ ராவ், இ.ஆ.ப.,மதுரை மாநகராட்சி, கே.கே. நகர் சந்தை பகுதியில் அம்ருத் திட்டத்தின் கீழ் முல்லைப் பெரியார் ஆற்றிலிருந்து செயல்படுத்தப்பட்டு வரும் பிரத்யேக குடிநீர் திட்டப் பணிகள் மற்றும் அதன் கீழ் அமைக்கப்பட்டுள்ள 12 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## ஏரிகளில் இலவச வண்டல் மண் எடுக்க அனுமதி

# விவசாயிகள், மண்பாண்ட தொழிலாளர்கள் பயன்பெற மாவட்ட ஆட்சியர் அழைப்பு!

சிவகங்கை மே.28-

சிவகங்கை மாவட்டத்தில் நீர்வள ஆதாரத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகள் மற்றும் நீர்நிலைகளில் இருந்து விவசாயிகள், மண்பாண்ட தொழிலாளர்கள் மற்றும் தனிநபர்கள் வீட்டு உபயோகத்திற்காக இலவசமாக வண்டல் மண் மற்றும் களிமண் எடுத்து செல்லலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சிறுகனிம விதிகள் 1959ன் விதி எண் 122(ணீ), 122(தீ) அடிப்படையில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி நஞ்சை நிலங்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏக்கருக்கு 75 கன மீட்டர் அல்லது 25 டிராக்டர் லோடுகள், புஞ்சை நிலங்களுக்கு 90 கன மீட்டர் அல்லது 30 டிராக்டர் லோடுகள் வரை வண்டல் மண் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது.

மேலும், மண்பாண்ட தொழிலுக்காக 60 கன மீட்டர் அல்லது 20 டிராக்டர் லோடுகள் களிமண், தனிநபர் வீட்டு உபயோகத்திற்கு 30 கன மீட்டர் அல்லது 10 டிராக்டர் லோடுகள் வரை எடுத்துச் செல்லலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் நீர்வள ஆதாரத்துறை கட்டுப்பாட்டில் உள்ள 201 நீர்நிலைகள் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 777 நீர்நிலைகள் என மொத்தம் 978 நீர்நிலைகள் இதற்காக அரசிதழில் அறிவிக்கப்பட்டுள்ளன.

இலவசமாக வண்டல் மண் மற்றும் களிமண் பெற விரும்புவோர் tnesevai.tn.gov.in இணையதளத்தில் விதிமுறைகளுக்குட்பட்டு விண்ணப்பித்து, உரிய ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் அனுமதி பெற வேண்டும். பின்னர் சம்பந்தப்பட்ட ஏரியின் கட்டுப்பாட்டு அலுவலரிடம் நடைச்சீட்டு பெற்று, அவர்களின் முன்னிலையில் மட்டுமே மண் எடுத்து செல்ல அனுமதி வழங்கப்படும்.

அனுமதி சீட்டு இல்லாமல் மண் எடுத்து செல்லுதல், அனுமதிக்கப்பட்ட அளவை மீறி எடுத்துச் செல்லுதல் போன்ற விதிமீறல்கள் கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட வாகனங்கள் பறிமுதல் செய்யப்படுவதோடு, கடும் சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் எச்சரித்துள்ளார்.

மேலும், இவ்வாறு பெறப்படும் வண்டல் மண் மற்றும் களிமண் எந்தவித வணிக நோக்கத்திற்கும் பயன்படுத்தக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தற்காப்பு கலையான கராத்தேவை கற்றுக் கொண்டால் செல்ப் கான்ஃபிடன்ஸ் அதிகரிக்கும் தங்கம் வென்ற வீராங்கனை தெரிவிப்பு



சென்னை, மே.28-

இன்டர்நேஷனல் ஓப்பன் கராத்தே சாம்பியன்ஷிப் மலேசியா 2026 தலைப்பில் மலேசியாவில் நடைபெற்ற இந்த போட்டியில் பங்கேற்பதற்காக இந்தியா சார்பில் 40க்கும் மேற்பட்ட வீரர்கள் வீராங்கனைகள் பங்கேற்றனர் அதில் தமிழகத்தில் இருந்து 15 க்கும் மேற்பட்ட வீரர் வீராங்கனைகள் பங்கேற்றனர் இதில் இந்தியா உட்பட மலேசியா சீனா பாகிஸ்தான் பெயின் பங்களாதேஷ் ஸ்ரீலங்கா பத்துக்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 2500 வீரர்கள் வீராங்கனைகள் பங்கேற்றனர் இந்த போட்டியானது மே 22 ஆம் தேதி இருந்து 24 ஆம் தேதி வரை நடைபெற்றது இந்த போட்டியில் பங்கேற்ற இந்தியா சார்பில் தமிழகத்தில் இருந்து சென்ற பதினைந்து பேர்களில் காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு மாவட்டத்தில் இருந்து நான்கு பேர் கட்டா குமித்தெ பிரிவுகளில் பதக்கங்களை குவித்து உள்ளனர் இதில் ஒரு தங்கம் 4 வெள்ளி 3 வெண்கலம் வென்று அசத்தி நாட்டிற்கு பெருமை சேர்த்து உள்ளனர். இதனைத் தொடர்ந்து கோலாலம்பூரில் இருந்து விமானம் மூலம் சென்னை விமான நிலையம் வந்தடைந்த வீரர் வீராங்கனைகளுக்கு உறவினர்கள் மாலை அணிவித்து சால்வை அணிவித்தும் இனிப்புகள் வழங்கியும் உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்.தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்தபோது கராத்தே தற்காப்பு கலை போட்டியானது மிகப் பழமையான போட்டி என்பதும் தற்போது வரும் புதிய போட்டிகளுக்கு அங்காரம் வழங்கப்பட்டு வருகிறது என்றும் ஆனால் இதற்கு அங்கீகாரம் வழங்க வேண்டும் என்றும் மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்றும் தமிழக முதல்வருக்கு பயிற்சியாளர் பெருமாள் கோரிக்கை வைத்தார்.தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த தங்கம் வென்ற வீராங்கனை கராத்தே போட்டியில் வெற்றி பெற்ற எங்களுக்கு ஸ்போர்ட்ஸ் கோட்டா சார்பில் கல்லூரிகளில் சேர்வதற்காக வாய்ப்புகளை அதிகப்படுத்த வேண்டும் என்றும் தங்கம் வென்ற வீராங்கனை கோரிக்கையும் வைத்தார்மேலும் தான் ஏழு வருடங்களாக கராத்தே பயிற்சி மேற்கொண்டு வருகிறேன் என்றும் இதனால் எனக்கு செல்ப் டிபன்ஸ் மற்றும் கான்ஃபிடன்ஸ் அதிகரித்து இருப்பதாகவும் தெரிவித்தார் மேலும் தமிழக முதல்வரையும் நேரில் சந்தித்து வாழ்த்து பெற வேண்டும் என்றும் ஆசையையும் தங்கம் வென்ற வீராங்கனை தெரிவித்தார் மேலும் பெண்கள் அனைவரும் செல்ப் டிபன்சை கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அப்போதுதான் போல்டாக இருக்க முடியும் என்றும் நான் யாருக்காகவும் பயப்பட தேவையில்லை என்றும் தெரிவித்தார்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161